பக்கங்கள்: ஆறு

Registered as a News Paper in Sri Lanka

விலை ரூபா: 5-00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 24 ஞாயிற்றுக்கிழமை (9-12-2001) தொலைபேசி: 3378 ஒலி 354

நாளுக்கு நாள் மாறும் நவ நாகரிக ஆடை வகைகளுக்கு:
காவேரி
பட்டுச் சோலை
48, பெரியகடை வீதி
யாழ்ப்பாணம்
T. P 2333

12ஆவது பாராளுமன்றத்தின்

# பிரதமராக ரணில் இன்று பதவி ஏற்பு

# மந்திரிசபை அமைப்பதில் இழுபறி!

## அமைச்சரவையில் எஸ்.பி.பீரிஸ் சொக்ஸி?

(நமது நிருபர்)

பன்னிரண்டாவது பாராளுமன்றத்தின் புதிய பிரதமராக ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா இரண்டாவது தடவையாக இன்று பிற்பகல் 2 மணிக்கு பதவி ஏற்கவுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாவுடன் அமைச்சரவை அமைப்பது தொடர்பாக நேற்று மாலை 5.30 மணிதொடக்கம் 6.30 மணிவரை இடம்பெற்ற பேச்சு வார்த்தையை அடுத்தே இப் பதவி ஏற்பு வைபவம் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா முன்னிலையில் நடை பெறவுள்ளது.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் ஆகக் கூடுதலான ஆசனங்களைப்பெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவை ஜனாதிபதி சந்திரிகா நேற்று அழைத்து ஆலோசனைநடத்தினார்சுமார் ஒருமணிநேரம் நடைபெற்ற ஆலோசனையின் போது புதிய அமைச்சரவையில் பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்களான லஷ்மன் கதிர்காமர், மங்கள சமரவீர ஆகியோரையும்சேர்த்துக்கொள்ள வேண்டுமென ஜனாதிபதி வலியுறுத்திக்கேட்டுள்ளதாக ஐக்கியதேசியக் கட்சிவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதியின் இவ் வேண்டுகோளை ரணில் விக்கிரமசிங்கா நிராகரித்துள்ளார். அரசியல் அமைப்பின் பிரகாரம் பிரதமருடன் கலந்தாலோசித்தபின்னர் புதியஅமைச்சர்கள் நியமனம் செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது இந் நிலையில்

[6 ம் பக்கம் பார்க்க]

## அமைச்சரவை அமைப்பதற்கு முன் கட்சித்தலைவர்களுடன் பேச்சு

### ஐ. தே. கட்சிப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சரவைக்கு உறுப்பினராகத் தெரிவு செய்வதற்கு முன்னர் கட்சித்தலைவர்களையும் அழைத்து கலந்தாலோசிக்கப்போவதாக ஐ... பட்டபின் நாட்டின் சகல பிரச்சினைகளுக்கும் முடிவு காண்பதற்கு சகல கட்சித்தலைவர்களையும் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாகவும் ... சேனாகொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் பாதுகாப்பு அமைச்சர் பதவியை ஜனாதிபதிக்கு வழங்க முடியாதெனவும் ...

## யாழ். மாவட்ட தேர்தல் முடிவுகளை உடன்இரத்துசெய்யவும்

### டக்ளஸ் கோரிக்கை

(கொழும்பு)

யாழ் மாவட்ட தேர்தல் முடிவுகளை உடன் இரத்துச் செய்யுமாறு ஈழமக்கள ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் டக்ளஸ் தேவானந்த யாழ் தெரிவத்தாட்சி அலுவலரிடமும், தேர்தல் ஆணையாளரிடமும் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

யாழ் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் தேர்தல் முறைகேடுகள் இடம் பெற்றுள்ளதாக எனக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன;

யாழ் தேர்தல் மாவட்டத்

(→ 6ஆம் பக்கம் பார்க்க)

ரணில் அமைச்சரவையில்

## தமிழ், முஸ்லிம்களுக்கும் இடம் ஒதுக்கீடு

[கொழும்பு]

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் அமைக்கப்படவுள்ள அமைச்சரவையில் கணிசமான அளவு தமிழ், முஸ்லிம் எம்பிக்கள நியமனம் பெறலாம் என ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள்தெரிவித்துள்ளன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த ஆறுமுகம் தொண்டமான் மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த பெ. சந்திரசேகரன் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த தி, மகேஸ்வரன் முஸ்லிம்காங்கிரசைச் சேர்ந்த ரவூப் ஹக்கீம் எம்.எச் முகாமட காதர் ஹாஸியார் ஆகியோர் அமைச்சரவையில் இடம் பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது;

(வ)

## சித்தார்த்தனின் வீடு

# அமைச்சரவை அமைப்பதற்கு முன் கட்சித்தலைவர்களுடன் பேச்சு

## ஐ. தே. கட்சிப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சரவைக்கு உறுப்பினராகத் தெரிவு செய்வதற்கு முன்னர் கட்சித்தலைவர்களையும் அழைத்து கலந்தாலோசிக்கப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

புதிய அரசு அமைக்கப்பட்ட பின் நாட்டின் சகல பிரச்சினைகளுக்கும் முடிவு காண்பதற்கு சகல கட்சித்தலைவர்களையும் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாகவும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு சகலகட்சிகளும் ஒத்துழைப்புத்தர வேண்டுமென்றும் கருணாசேனா கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் பாதுகாப்பு அமைச்சர் பதவியை ஜனாதிபதிக்கு வழங்க முடியாதெனவும் அமைச்சரவையை சுதந்திரமாக அமைப்பதற்கு ஜனாதிபதி இணங்கவேண்டுமென்று தெரிவித்தார். (வ)

[கொழும்பு]

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் அமைக்கப்படவுள்ள அமைச்சரவையில் கணிசமான அளவு தமிழ், முஸ்லிம் எம்பிக்கள நியமனம் பெறலாம் என ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்த ஆறுமுகம் தொண்டமான் மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த பெ. சந்திரசேகரன் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த தி, மகேஸ்வரன் முஸ்லிம்காங்கிரசைச் சேர்ந்த ரவூப் ஹக்கீம் எம்.எச் முகமட் காதர் ஹாஜியார் ஆகியோர் அமைச்சரவையில் இடம் பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## எதிர்க்கட்சித் தலைவராக அனுரவா? மகிந்தவா?

(கொழும்பு)

புதிய பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு பலத்த போட்டி நிலவுவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில் மேற்படி பதவிக்கு முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கா, முன்னாள் சபா நாயகர் அனுரா பண்டாரநாயக்காமுன்னாள் அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரிடையே கடும்போட்டி நிலவியதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

பிரதமர் ரட்ணசிறி விக்கி

(6ம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

நாடுமுழுவதும் நேற்று மாலை 6.00மணிக்கு வந்த ஊரடங்கு உத்தரவு இன்று

(→ 6ஆம் பக்கம் பார்க்க)

## சித்தார்த்தனின் வீடு பொலிசாரால்சோதனை

[வவுனியா]

புளொட் அமைப்பின் தலைவரும், நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் வன்னி மாவட்ட பாராளுமன்றஉறுப்பினராகத் தெரிவு செய்யப் பட்டவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் வசிக்கும் வவுனியா வீடு நேற்று பொலிசாரினால் சல்லடை போட்டு சோதனையிடப் பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வைரவப் புளியங்குளம் பகுதியில் ரெலோ ஆதரவாளர்கள இருவர் கொலலப்பட்டமை தொடர்பாக வவுனியா மாவட்ட நீதிபதி இளஞ்செழி

(→ 6ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல் முடிவுகளின் பிரகாரம் புலிகளே தமிழரின் பிரதிநிதிகள்

## இரா சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதை நடைபெற்று முடிந்த தேர்தல் முடிவுகள் சர்வதேச சமூகத்திற்கும் தென்னிலங்கை சிங்கள சமூகத்திற்கும் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளன.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர்களுள் ஒருவரான இரா சம்பந்தன் இலண்டன் தமிழ் சேவைக்கு வழங்கிய செவ்வியில் மேற்கண்டவாறு தெரிவித்துளளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரே கொள்கையின் கீழ் செயற்படவுள்ளது எனவே இவ் அமைப்பிற்குள் எந்தவிதமான பிளவுகளும் ஏற்பட வாய்ப்பில்லை

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகள் பெற்ற மண்ணியல் நிபுணரான தங்கவடிவேல் கருத்து

(→ 6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாநகர மேயர் விரைவில் இராஜினாமா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர மேயர் நடராசா ரவிராஜ் தனதுமேயர் பதவியை இராஜினாமாச் செய்யவுள்ளார்.

நடந்துமுடிந்த பொதுத் தேர்தலில் தமிழர்விடுதலைக் கூட்டணியின் சார்பில் யாழ் மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றதை அடுத்தே அவர்மேயர்பதவியை இராஜினாமாச் செய்யவுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

1998ம் ஆண்டுசெப்ரம்பர் மாதம் மேயர் பொன்.சிவபாலன் கொலை செய்யப்பட்ட பின் என்.ரவிராஜ் 2000ம் ஆண்டுவரை பிரதி மேயராக பதவிஏற்று 2001ம் ஆண்டு முதல் மேயராகப் பதவி ஏற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

மீசாலை கிழக்கைச் சேர்ந்த இலட்சுமி இராசரத்தினம் வயது65(ஓய்வூதியர்) என்பவருடைய தேசிய அடையாள அட்டை (365650217 V) விசேட அடையாள அட்டை (091004086) இரண்டும் யாழ்ப்பாண பஸ்நிலையத்தில் காணாமல் போய் விட்டது. கிடைக்கப் பெற்றவர்கள் வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

(C/ 2989)

## கிரிக்கெட் ஆட்டத்தில் இலங்கை உலக சாதனை

(கொழும்பு)

இலங்கை சிம்பாவே அணிகளுக்கிடையே நேற்று நடைபெற்ற சர்வதேச ஒரு நாள் போட்டித் தொடரில் இலங்கை அணியினர் 5 உலக சாதனைகளைப் படைத்துள்ளனர்;

★ 38 ஓட்டங்களுக்குள் சிம்பாவே அணியை ஆட்டமிழக்கச் செய்தமை.

★ 15.2ஓவர்களில்சிம்பாவே அணியின் சகல இலக்கையும் வீழ்த்தியமை 4.2 ஓவர்களில் இலங்கை அணி வெற்றியீட்டியுள்ளமையும்.

★ மொத்தமாக 19 4 ஓவர்களில் இரு அணிகளும் போட்டியை முடித்துக்கொண்டமை

★ இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் சமிந்த வாஸ்8 ஓவர்கள் பந்து வீசி 19 ஓட்டங்களை கொடுத்து 8 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளமையும் இதன் மூலம் முரளியின் சாதனை முறியடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

★ இலங்கை அணி வீரர் வாஸ் தொடர்ச்சியாக 8 விக்கெட்டுகளைவீழ்த்தியதுடன்3 தொடர் விக்கெட்டுகளை வீழ்த்தி ஹெட்ரிக் சாதனையும் படைத்துள்ளார்.

(உ-10,2)

## விளையாட்டு செய்தி

## உலக சாதனை படைத்த இலங்கை வீரர் சமிந்த

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறும் 'அபான்ஸ்' வெற்றிக்கிண்ண முக்கோண போட்டித் தொடரின் முதலாவது ஆட்டத்தில் இலங்கையணி, சிம்பாவே அணியை 9விக்கெட் வித்தியாசத்தில் வெற்றியீட்டியுளளது.

நேற்றைய தினம், எஸ். எஸ் சி.மைதானத்தில்இடம் பெற்ற மேற்படி போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவேஅணி 15.4 ஓவரில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 38 ஓட்டங்களைப் பெற்றது.

பந்து வீச்சில் இலங்கையணியின் வேகப்பந்து வீச்சாளர் சமிந்த வாஸ் 19 ஓட்டங்களைக் கொடுத்து 8 விக்கெட்டுக்களை விழுத்தி புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

இதில் முரளிதரன் 1ஓட்டம் கொடுத்து 2 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கையணி 4.2 ஓவரில் 1 விக்கெட்டை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் அத்தப்பத்து 23 ஓட்டங்களையும் ஜெயசூரியா 13 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல்பெற்றுக்கொண்டனர்.

ஆட்ட நாயகனாக வாஸ் தெரிவு செய்யப்பட்டார்.

(உ-2-10)

## பாம்பு தீண்டி மரணம்

(அல்லாரை)

தோட்டத்தில் புல் பிடுங்கியவர் பாம்பு தீண்டி மரணமானார்.

இந்தச் சம்பவம் அண்மையில் அல்லாரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை கனகரத்தினம் (வயது-50) என்பவரே பாம்பு தீண்டிய நிலையில் வைத்திய வசதிகள் இல்லாத காரணத்தினால் மரணமானதாகத் தெரியவந்துள்ளது.

(உ-210)

## உங்கள் பிறப்பு

நட்சத்திரம் உள்ள நாள் திங்கட் கிழமையானால, சித்த யோகம் உதயமாகும். இந்தநாள்உங்களுக்குநன்மையளிக்கக்கூடியது.

கௌரி பஞ்சாங்கவேளை 1 மணி நேரத்துக்குள் - அமிர்த வேளையில், சந்திரன் ஓரைக்காலத்தில் அல்லது 2.00 மணி நேரம் முதல் 3.00 மணி நேரத்துக்கு உள்ளாக எந்தக் காரியமும் செய்ய, அல்லது முயற்சிக்க சிறப்பான நன்மையையும் பெற முடியும். கௌரி பஞ்சாங்க வேளை, உத்தியோக வேளையில் எந்த முயற்சியும் சிறப்பு நன்மைக்குரியதேயாகும்.

ரேவதி நட்சத்திரம் உண்டாகும் நாள் வியாழக்கிழமையானால் சித்தயோகம் வரும், இந்த நாள் உங்களுக்குஎல்லா வகையிலும் சிறப்புத் தரக் கூடியது. ஆகவே, உங்கள் சுப முயற்சிகளை இந்த நாளில் வைத்துக் கொள்ள நன்மை பலவும் உண்டாகும். ஆனந்தாதி யோகத்தில் மித்திர யோகம் மிகமிக நன்மைக்குரியது. இது பெரும் பகுதி அரசியல், அரசு சம்பந்தப்பட்ட காரியங்களுக்கு பயன்படுத்த, பெருமை தரும், நன்மைகள் அடையலாம் என்பது சாத்திர விதி. கௌரி பஞ்சாங்க வேளையில் இரண்டரை நாழிகைக்குள்ளாக (ஒரு மணி நேரம்) உத்தியோக வேளையிலும், குருகால ஓரையிலும் அல்லது பன்னிரண்டரை நாழிகைக்குமேல் - (5 மணி நேரத்திற்குமேல்) பதினைந்து நாழிகைக்குள் (ஆறு மணி நேரத்துக்குள்) லாபவேளையிலும், சந்திரன் ஓரையிலும் பயன்பெறத்தக்க வகையிலும் எந்த சுப முயற்சியையும் செய்யலாம். ரேவதி நட்சத்திரம் வரும் நாள் வெள்ளிக் கிழமையானால் அமிர்த யோகம் வரும். இந்த நாளில் நீங்கள் எல்லா சுப காரியங்களையும் செய்வது சிறப்பாக இருக்கும். ஆனந்தாதியோகத்தில் ஸ்ரீவர்ச்சயோகம் என்பது மிக மிகச் சிறப்பானது. இதன் பலன் லட்சுமிலாபம். கௌரி பஞ்சாங்க வேளையில் 10 நாழிகைக்குமேல் பதினொன்றரை நாழிகைக்குள் (4 மணி நேரத்துக்குமேல் 4 மணி 36 நிமிடத்திற்குள்) அமிர்தவேளையிலும், குரு காலஓரையில் பகல்1 மணிக்கு மேல் 1 30 மணிக்குள்ளாக, லாபவேளையில் சுக்கிரன் ஓரையில் நீங்கள் எந்தச் சுப முயற்சி செய்தாலும் நன்மையே உண்டாகும். இந்தப் பரணிக்கு வேதை (ஆகாதது) அனுஷ நட்சத்திரம். திருமணம் செய்ய, தொழில் கூட்டு சேரவும் பொருந்தாத நட்சத்திரங்கள் 6 (ரச்சு) அவைகள் பூசம், பூரம், அனுஷம், பூராடம், உத்தரட்டாதி, விசாகம். அதிர்ஷ்ட மலர் - வெண்தாமரை. அனுகூல தெய்வம் - லட்சுமி அதிர்ஷ்டக்கல் - வைரம். அதிஷ் -நிறம் வெண்நீலம் அதிர்ஷ்ட எண் - 2

(தொடரும்)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் இன்று மு:ப 10.00மணிக்கு கல்லூரி மண்டபத்தில்நடைபெறவுள்ளது;

[உ-3]




# மனமுவந்த நன்றிகள்!

## அன்பார்ந்த இனிய தமிழ் மக்களே!

நடந்து முடிந்த பாராளுமன்ற பொது தேர்தலில் நீங்கள் ஒன்று திரண்டு தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு ஜனநாயக வழியிலேவலுக் கொடுக்க தமிழர் கூட்டமைப்பாம் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு அமோக ஆதரவளித்தமைக்கு முதற்கண் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன். யாழ்.குடாநாடு முழுவதும் பரந்து வாழும் மக்கள் எனக்கு அளித்த அமோக ஆதரவுக்கு என் இதயம் கவர்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன்.

## தென்மராட்சி வாழ் மக்களே!

இடம்பெயர்ந்து வாழ்ந்தாலும் சிரமம்பாராது எமது மண்ணின் வெருமையை பகிரங்கமாக பறைசாற்றி எனக்களித்த ஆதரவுக்கு நன்றிகள். தேர்தல் தினத்தன்று நீங்கள் அடைந்த போக்குவரத்து கஷ்டங்களை நான் அறிவேன். அதற்காக நான் வேதனைப்படுகின்றேன். உங்கள் மனத்திடத்திற்கும் நீங்கள் என்மீது வைத்த நம்பிக்கைக்கும் விசுவாசமாக இருப்பேன்.

## தீவக வாழ் மக்களே!

தமிழர் கூட்டமைப்புக்கு நீங்கள் துணிகரமாக அளித்த அமோக ஆதரவுக்கு எனது மனமுவந்த நன்றிகள். உங்கள் மண்ணின் மைந்தன் பேரம்பலத்தை என்றும் நன்றியுடன் நினைப்போம்.

வருங்காலங்களில் உங்கள் பிரச்சினைகளில் நானும் பங்கெடுத்து என்னாலான உதவிகளை செய்வதற்குரிய பலத்தையும் தைரியத்தையும் எல்லாம் வல்ல இறைவன் எனக்களிக்க வேண்டுமென பிரார்த்தித்து மீண்டும் மனமுவந்த நன்றிகளை உங்களிற்கு தெரிவிக்கின்றேன்.

நடராஜா இரவிராஜ்
சட்டத்தரணி
(யாழ். மாநகர முதல்வர்)

(இ-2990)

## இன்று ஒரு தகவல்

# மதுவின் கொடுமை

ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார். அவர் நல்ல ராஜாவாக இருந்தாலும் ஒருகெட்ட பழக்கம் இருந்தது. அதுதான் குடிப்பழக்கம். முதலிலே சிறிதளவு குடித்தார். நாள் செல்லச் செல்ல அதிகமாக குடித்தார்.

இதனால் எல்லோருக்கும் மிகுந்த கஷ்டம். ராஜாவே குடிக்க ஆரம்பித்துவிட்டால் நாடு என்ன நிலைமை? ராணிக்கும் இது மனதிற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. இந்த பிரச்சினைக்கு தீர்வுகாண புத்திசாலியான அமைச்சர் ஒருவர் முன்வந்தார்.

ஒருநாள் ராஜா இருந்த தனி அறைக்குள்ளே அமைச்சர் போனார். ராஜா கவனிக்குப்டியாக அங்கே இருந்த ஒரு மதுப்போத்தலை எடுத்து தன்மடியிலே மறைத்து வைத்தார்.

இதனை அவதானித்த ராஜா உடனே அமைச்சரை அருகிலே கூப்பிட்டார். 'மடியிலே என்ன' என்று கேட்டார். 'ஒன்றும் இல்லை' என்றார் அமைச்சர். 'உண்மையைச்சொல் மடியிலே என்ன' என்று மறுபடியும் கேட்டார் ராஜா. 'இது... இது...வந்து... கிளி என்றார் அமைச்சர். என்ன உளறுகிறாய்? கிளியா அது' என்றார் ராஜா. 'இல்லே... இல்லே... இது குதிரை' என்றார் அமைச்சர். ராஜாவிற்கு கோபம் அதிகமானது.

'இதோபார் செய்த குற்றத்தை ஒத்துக்கொள். அதுதான் உனக்கு நல்லது. அதை விட்டுவிட்டு குதிரை-கழுதை என்று கதைவிடாதே' என்றார் ராஜா.

'மன்னா நீங்கள் சொல்லுவதுதான் சரி. என் மடியில் இருக்கிறது கழுதைதான்' என்றார் அமைச்சர் கோபத்தின் உச்சிக்கு சென்றுவிட்ட மன்னர், 'இதோபார் கடைசி வாய்ப்புத் தருகின்றேன் மடியிலே இருப்பது என்னவென்று உள்ளதைச் சொல் அல்லது உயிரை விட வேண்டும் என எச்சரித்தார்.

இந்தத்தடவை அமைச்சர் உள்ளதைச் சொன்னார். 'மடியிலே இருப்பது மதுப் போத்தல்' என்றார். 'முதலிலேயே உள்ளதைச் சொல்லியிருக்கலாமே' என்றார் ராஜா. 'இப்பவும் சொல்கின்றேன் நான் சொன்னது எதுவுமே பொய் இல்லை என்றார் அமைச்சர்.

ராஜா முறைத்துப் பார்த்தார். அப்போது அமைச்சர் விளக்கம் கொடுக்க ஆரம்பித்தார்.

'ராஜா! முதலிலே ஒரு கோப்பை மது உள்ளே போனால் ஒன்றும்செய்யாது அதைத்தான் ஒன்றுமில்லை என்றேன். இரண்டாவது! கோப்பை உள்ளே சென்றதும் மனுஷன் கிளிப்பிள்ளை மாதிரி சொன்னதையே திரும்ப சொல்லுவான்; அதனாலே கிளி என்று சொன்னேன். மூன்றாவது கோப்பை உள்ளே சென்றதும் குதிரை மாதிரி உறும ஆரம்பிப்பான். நாலாவது கோப்பை சென்றதும் கழுதை மாதிரி கத்த ஆரம்பிப்பான். ஐந்தாவது கோப்பை உள்ளே சென்றதும் மனிதன் மதுவாகவே ஆகிவிடுவான். அதனால் தான் ஐந்தாவது தடவை கேட்டதும் மது என்று ஒத்துக்கொண்டேன்' என்றார் அமைச்சர்.

மது எவ்வளவு கெடுதலானது என்பதை ராஜாவிற்கு மிகவும்சாமர்த்தியமாகப்புரிய வைத்தார் அமைச்சர். அதன் பின் ராஜா குடிப்பழக்கத்தையே விட்டுவிட்டார். □

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

---

### வடமராட்சியில்

# காய்ச்சல் நோயின் தாக்கம் அதிகரிப்பு

[மந்திகை]

வடமராட்சிப் பகுதியில், காய்ச்சல் வெகு வேகமாகப் பரவி வருவதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன:

துன்னாலை, கரவெட்டி, கரணவாய் பகுதிகளில் காய்ச்சல் நோயின் தாக்கம் தீவிரமடைந்துள்ளதாகவும்,

இந்நோயின் தாக்கத்திற்கு பெருமளவில் குழந்தைகளே ஆளாவதாகவும் மேலும் தெரியவருகிறது. (உ-23)

# கட்சி ஆதரவாளரிடையே கல்வீச்சு மூவர் காயம்

(மந்திகை)

தேர்தல் முடிவுகள் தொடர்பாக இருகட்சி ஆதரவாளர்களிடையே ஏற்பட்ட வாக்குவாதம் கல்வீச்சில் முடிந்ததில் மூவர் காயமடைந்தனர்.

கடந்த வியாழக்கிழமையன்று கரவெட்டி இராஜ கிராமத்தில் ஏற்பட்ட இந்த கல்வீச்சுச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த ச.சந்தான ரூபன் (வயது 25) இ. ஸ்ரீவாசா (வயது 29), கே.விக்னேஸ்வரன் (வயது22) ஆகியவர்களே காயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [உ-23]

### முஸ்லிம் ஆதரவாளர் சுட்டுக் கொலை

# விசாரணைகளை நடத்த இரகசிய பொலிஸ் விரைவு

[கொழும்பு]

தேர்தல் தினதத்தன்று கண்டி மடவெல பகுதியில் முஸ்லிம் ஆதரவாளர்கள் 12 பேர் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு இரகசிய பொலிஸார் அங்கு விரைந்துள்ளனர்.

இப்படு கொலைகள்தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் பொறுப்பு முன்னர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது.

இப்படு கொலைகளை முன்னின்று நடத்தியதாகச் சந்தேகிக்கப்படும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான ஜெனரத் அனுருத்த ரத்வத்தை வெளிநாடு ஒன்றிற்குத் தப்பியோடியுள்ள இந்த நேரத்தில ஆரகசியப் பொலிஸார் அங்கு விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்,

இப்படு கொலைகளைக் கண்டித்து கல்முனை, அம்பாறை போன்ற முஸ்லிம் கிராமங்களில் வெள்ளைக் கொடிகள் கட்டிப் பறக்க விடப்பட்டுள்ளன. (உ-5)

---

# புலிகளுக்கும் பின்லேடனுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது

## இந்திய மத்திய அமைச்சர் தெரிவிப்பு

[கொழும்பு]

விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் பின்லேடனின் அல்கெய்டா அமைப்புக்கும் தொடர்பிருப்பதற்கான ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை என்று இந்திய மத்திய அமைச்சர் வித்யாசாகர் ராவ்ராஜ்ய சபையில் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா இயக்கத்துக்கும் புலிகளுக்கும் தொடர்பிருப்பதற்கான ஆதாரம் எதுவும் இல்லை.

கிழக்காசியாவில் அல்கெய்டா இயக்கம் தீவிர வாதத்தில் ஈடுபடும் என்று கூறப்படுவது ஏற்கக் கூடியதல்ல என்றார்.

இதேவேளை, புலிகளுடனான நெருக்கமான தொடர்பு காரணமாக, அமெரிக்காவால் தேடப்பட்டு வரும் ஒஸாமா பின்லேடன் வன்னிக்காட்டுக்கு தப்பியோடி விட்டதாக செய்திகள் பரவலாக வெளியானமை தெரிந்ததே. [உ]

# பிரதி சபாநாயகரும் படு தோல்வி

(கொழும்பு)

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் முன்னாள் பிரதிசபாநாயகரும், இராணுவப் பேச்சாளருமான சரத் முனசிங்கா படுதோல்வி அடைந்துள்ளார்.

தேர்தலின் பின் அமைக்கப் படும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக இவர்நியமனம் பெறுவார் என பேசப் பட்டதும் குறிப்பிடத்தக்கது. (வ)

## இராசி பலன்

(09-12-2001)

(கார்த்திகை 24, ஞாயிறு)

நவமி மு:ப 11.24 வரை

உத்தரம் மு.ப 9.24 வரை

ராகுகாலம் 4.48-6.18

சுபநேரம் 9.18-10.48

அமிர்தம்

**மேடம்**
காரிய அனுகூலம். சத்துரு ஜெயம்,மனமகிழ்ச்சி, ஆரோக்கியம்.

**இடபம்**
வியாதி, தாழ்ந்த சுபாவம், வியாபார நன்மை, காரிய தாமதம்.

**மிதுனம்**
அற்பர் உறவு, மனச்சஞ்சலம், தொழில் நன்மை, முயற்சி தாமதம்.

**கடகம்**
நினைத்த காரியம் கைகூடும், தனவரவு, கூட்டு முயற்சி,வாக்கு மேன்மை;

**சிங்கம்**
பெண்கள் உதவி,வாக்குக் கலகம், காரியம் கைகூடும, கௌரவக் குறைவு;

**கன்னி**
ஜனவசியம், தொழில் சிறப்பு,நல்ல முயற்சி,போசன சுகம்;

**துலாம்**
உறவினர் வெறுப்பு, காரிய அலைச்சல், தனவிரயம், அதிகாரம்.

**விருச்சிகம்**
தெய்வதரிசனம், மனமகிழ்ச்சி, காரியம் கைகூடும்,கீர்த்தி;

**தனுசு**
தொழில் சிறப்பு, அதிகாரம், சுபநிகழ்வு, நல்ல செய்தி;

**மகரம்**
பிரயாணம், ஆன்றோர் மதிப்பு, புதிய திருப்பம், காரிய தாமதம்;

**கும்பம்**
காரிய தாமதம், மனக் குழப்பம், எதிர்பாராத பிரச்சினை,போசன சுகம்;

**மீனம்**
பிரயாண சுகம்,காரிய அனுகூலம், சுவாரஸ்யம், அபூர்வ சந்திப்பு;

(பழைய நேரப்படி கணிப் பிடப்பட்டது);

வளவன்

# விடுமுறையில் வீடு சென்ற படைவீரரை மயக்கி உடைமைகள் அபகரிப்பு

(கொழும்பு)

விடுமுறையில் கொழும்பு மஹரகமவிலுள்ள தனது வீட்டுக்கு பேருந்தில் சென்று கொண்டிருந்த படைவீரரின் உடைமைகள் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

அருகில் பயணம் செய்த நபர், மயக்க மருந்து கலந்த இனிப்பை படை வீரருக்கு வழங்கி மயக்கமடையவைத்து தனது காரியத்தை கச்சிதமாய் முடித்திருப்பதாய் அறிய முடிகிறது.

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் இராணுவ முகாமில் கடமையாற்றும தயாரத்ன அத்தபத்து என்பவருடைய தங்க நகைகள் மற்றும் 11 ஆயிரத்து 500 ரூபா ரொக்கப் பணம், இராணுவ அடையாள அட்டை, லீவுவிண்ணப்பம் ஆகியனவே இவ்வாறு களவாடப்பட்டுள்ளன. (உ)

### தேர்தல் வன்முறைகளைத் தடுக்குமாறு

# பொ. ஐ. மு. அமைச்சர்கள் ரணிலிடம் கோரிக்கை

(கொழும்பு)

ரணில்விக்கிரமசிங்காவின் தலைமையில் புதிய அரசு பதவி ஏற்றதும் நாட்டின் தற்போது இடம்பெற்று வரும் தேர்தல் வன்முறைகளை கட்டுப்பாட்டுக்குக்கொண்டுவர வேண்டுமென்று பதவி இழக்கவிருக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் முக்கியஸ்தர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பொதுஜன ஐக்கியமுன்னணியின் முக்கிய அமைச்சர்களான டி. எம். ஜயரத்தினா, மங்களசமரவீரா ஆகியோரே இவ் வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

இவ்வேண்டுகோளில் கண்டி சப்பஹா ஆகிய இடங்களில் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் ஐக்கிய தேசியக் கட்சி! ஆதரவாளர்களினால் தாக்கப்பட்டு வருவதனால் அதனை உடன் தடுத்து நிறுத்த புதிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளனர். (வ)

# மாணவர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த (உ/த) பரீட்சைக்கு இரண்டாவது தடவையாக தோற்றும்யாழ். மத்திய கல்லூரி மாணவர்கள், நாளை திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அதிபர் அலுவலகத்தில் சந்திக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (உ-3)

# திருட்டுச் சந்தேகத்தில் அகப்பட்டவர் விசாரணையில்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் சீரணிச் சந்திக்கு சமீபமாகவுள்ள வீடொன்றில் பகல் வேளையில் உள்ளே புகுந்து அங்கிருந்து பெறுமதி மிக்க நகைகளைத் திருடிச் சென்றார்கள் என்ற சந்தேகத்தில் இருவர் அகப்பட்டனர்.

இச்சம்பவம் பற்றி அறியப் படுவதாவது.: சண்டிலிப் பாயில் சமுர்த்தி உத்தியோகத்தராகப் பணிபுரியும் சுபாஜினி என்பவரின் வீட்டில் சிலதினங்களுக்கு முன்னர் யாருமில்லாத சமயம், வீட்டின் பின்பக்கயன்னல் ஊடாக அறைக்குள் நுழைந்த திருடர்கள் அங்கு வைக்கப் பட்டிருந்த 1லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய நகைகளைத் திருடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்திருட்டு சம்பந்தமாக அப்பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் மீது சந்தேகம் கொண்ட வீட்டு உரிமையாளர் நேற்று முன்தினம் அவர்களை தமது வீட்டுக்குக் கூட்டி வந்து விசாரித்த போது சந்தேகம் உறுதியானதைத் தொடர்ந்து தமது வீட்டுக்குள் அவர்களைப் பூட்டி வைத்து விட்டு மானிப்பாய் பொலிஸாரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து இருவரையும் பொலிஸார் விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ- 120)

## சிந்தனைக்கு விருந்து

### விசர் கொண்டார்

'ஷெல்'லாலே விடறியச் செல்வமகன் காலொன்றைப்
பொல்லா நிலக்கண்ணி போக்கிவிட - நல்லாரென்(று)
அண்டியவர் ஏச அருமைமனை யாள்சாகக்
கொண்டார் விசர்அழகக் கோன

-பழையவன்

# தலிபான்களின் கோட்டையென விளங்கிய
# கந்தகார் பழங்குடியினரிடம் கையளிப்பு

## சரணடைந்த தலிபான்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலிபான்களின்முக்கிய கோட்டையாக விளங்கிய கந்தகாரை தலிபான்கள் பழங்குடியினரிடம் கையளித்துள்ளனர்.

இராணுவத் தலைமையகம் பயற்சி முகாம்கள், மற்றும் இரகசியதகவல் தொடர்புநிலையங்கள் என்பனவும் இவற்றில் அடங்கும்.

கந்தகாரை தமது முழு அதிகாரத்தையும் பயன்படுத்தி முழுக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ள பழங்குடியினர், மீண்டும் கலவரங்கள் ஏற்படாதபடி பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர்.

இதே வேளை, பயங்கரவாதத்துடன் தொடர்பற்ற தலிபான்களுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்படும் சந்தர்ப்பம் இருந்த போதிலும், தலிபான்களின் தலைவர் முல்லா முஹமட்டிற்கு இது பொருந்தாது என்று ஆப்கானின் இடைக்கால அரசின் தலைவர் ஹமிட்பன்ஷர் கூறியுள்ளார்.

முல்லா முஹமட் எங்கிருந்தாலும் கண்டுபிடிக்கப்பட்டு கடுமையாக தண்டிக்கப்பட வேண்டியவர் என்றும், அவரை பன்னிப்பதை அமெரிக்கா முழுமையாக எதிர்க்கிறது என்றும் அதிபர் மாளிகையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தோறாகூர் மலைப் பகுதியில் அமைந்துள்ள ஒஸாமா பின்லேடனின் முக்கிய தளம் ஒன்றை தலிபானின் எதிரணியினரான வடக்குக் கூட்டணியினர் கைப்பற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இம் மலைப்பகுதி மாத்திரமே பின்லேடன் மறைந்து வாழ்வதற்கு ஏற்ற இறுதிப் பாதுகாப்பிடமாக அமைந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

## புலமைப்பரிசில் பாராட்டு

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை அ.மி.த.க.பாடசாலையைச் சேர்ந்த3 மாணவிகள் 5 ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமையைப்பாராட்டி பணப்பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

கடந்த வாரம் பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்ற இவ் வைபவத்தில்பாடசாலை அதிபர் சி.நாகையா சித்தியடைந்தமாணவரை பாராட்டி உரையாற்றியதுடன் அவர்களுக்கு தலா 1000 ரூபாவீதம் வழங்கி கௌரவித்தார்.

மேலும் ஓய்வுபெற்ற அதிபர் க.நித்தியனாந்தமும் இதில் கலந்து கொண்டு பணம்அன்பளிப்புச் செய்ததைத் தொடர்ந்து அப் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி கௌரவித்தனர். (எ-120)

## அமெ. அதிகாரிகள் குழு சவுதி அரேபியா விஜயம்

(வாஷிங்டன்)

பயங்கரவாதத்திற்கு நிதியுதவியளிக்கும் நாடுகள், அதனை நிறுத்த வேண்டுமெனக் கோரும் முகமாக அமெரிக்க அதிகாரிகள் குழுவொன்று முதன் முறையாக சவுதி அரேபியாவிற்குச் சென்றுள்ளது.

பயங்கரவாதத்திற்கு எதிராக நடைபெறும் யுத்தத்திற்கு பூரண ஆதரவு வழங்கி வரும் சவுதி அரேபியா இது தொடர்பாக ஏனைய எண்ணெய் வழங்கும் நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

### இஸ்ரேல்-பலஸ்தீன பிணக்கு
# இணக்கம் காணும் முயற்சியில் ஐரோப்பிய யூனியன் மும்முரம்

(பாரிஸ்)

இஸ்ரேல்-பலஸ்தீன நாடுகளுக்கிடையில் நிலவும் பிரச்சினையை சுமுகமாகத் தீர்ப்பது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இருநாடுகளினதும் சிரேஷ்ட அமைச்சர்களை ஐரோப்பிய யூனியன் அழைத்துள்ளது.

நீண்ட காலமாக இரு நாடுகளுக்குமிடையில் நிலவி வந்த பகைமை கடந்த சில வாரங்களில் இஸ்ரேல் மீது அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களினால்மிகவும்உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.

இதனால் பலஸ்தீனத்தின் ஹாஸா விமான நிலையத்தை இஸ்ரேல் படையினர் முற்றுகையிட்டதையடுத்துஇருநாடுகளுக்குமிடையில் தாக்குதல்கள் தீவிரமடையும் சாத்தியக்கூறுகள் அதிகமாக இருப்பதாக நம்பப்படுகிறது.

இந்த நிலையில், இரு நாடுகளுக்குமிடையிலான நீண்டகாலப் பிரச்சினையை ஒரு தீர்வுக்குக் கொண்டு வரும் நடவடிக்கையில் ஐரோப்பிய யூனியன் ஈடுபட்டதன் முதற்கட்டமாக இரு நாடுகளினதும் சிரேஷ்ட அமைச்சர்களை பிரான்சிற்கு அழைத்துள்ளது. (உ-5)

## திருமண வாழ்த்து

09. 12. 2001ல் பதிவுத் திருமணத்தில் இணையும்

திரு திருமதி வே. வதனதாசன்
தம்பதியினரை

பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ
வாழ்த்துகின்றோம்.

நல்லூர் நண்பர்கள்

[4070]

## இராணுவவீரர் காயம்

(கொழும்பு)

கடந்த5ஆம்திகதி அதிகாலை 3.25மணியளவில் புல்மோட்டைக்கு வடமேற்கேயுள்ள கொக்குத்தொடுவாய் பகுதியில்ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒருஇராணுவவீரர் காயமடைந்து பதவியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று ஊடகத் தகவல் நிலையம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தாக்குதலின் போது இராணுவத்தினர் திருப்பித்தாக்கியதையடுத்து புலிகள் பின்வாங்கிச்சென்றுள்ளதாகவும், அவர்களின் உயிரிழப்பு விபரம் தெரியவில்லை என்றும் மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## மிதிவெடியில் காயம்

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் சாவகச்சேரி, மிருசுவில், நாகர்கோவில், அரியாலை ஆகிய இடங்களிலும் வெலி ஓயா பகுதியிலும அண்மைக்காலத்தில் 4 இராணுவத்தினரும் பொது மக்களில் கணபதி கிட்ணன் (வயது-55) என்பவரும் மிதிவெடியில் சிக்கி காயமடைந்துள்ளனர்.

மிதிவெடிகள் அகற்றப்படாத பகுதிகளுக்கு பொது மக்கள் இராணுவத்தினரின் அனுமதி பெறாமலும் மிதிவெடி எச்சரிக்கை அபாய அறிவிப்புகளைக் கவனிக்காமலும் செல்வதால் அவர்கள் விபத்துக்குள்ளாகின்றனர்.

நவம்பர் 30ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 6 ஆம் திகதிவரை பினாக்காய்குளம், அளவெட்டி, அரியாலைஆகிய பகுதிகளில் 247 மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

இத்தகவல்களை ஊடகத் தகவல் நிலையச் செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

# இன்றைய சிறுவர்களிடம் நல்ல பண்புகள் அருகிச் செல்கின்றன
## அருட்தந்தை அன்ரனிபாலா கவலை

(கோப்பாய்)

இன்று யாழ். மண்ணில் வாழும் ஆரம்ப பாடசாலை மாணவர்கள் யுத்தத்தின் குழந்தைகளே, இவர்களிடம் நற்பண்புகள், மூத்தோரை மதித்தல், பிறர் சொல்லைக் கேட்டல், கீழ்படியும் தன்மை என்பன அருகிச் செல்கின்றன.

இந்த நிலைமையை மாற்ற வேண்டியது காலத்தின் தேவை என உரும்பிராய் றோ.க.த.க பாடசாலையில் அதிபர் மு. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற தாரகைசஞ்சிகைவெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயபங்குத் தந்தைஅருட் திரு. கு. வே அன்ரனிபாலாதெரிவித்தார்.

இந் நிகழ்வில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், சிறுவயதிலிருந்தே இவர்களை நற் பிரசைகளாக்கும் பொறுப்பு அதிபர். ஆசிரியர்களிடமும் பெற்றோர்களிடமும் தங்கியுள்ளது. இவ் விழாவின் மூலம் ஏற்படுகின்ற புதிய ஒளி சமுதாயத்திற்கு ஒளி காட்டியாக அமைவதுடன் அது முழுப்பிரதேசத்துக்கும் வியாபிக்க வேண்டும் என்றார்.

சஞ்சிகையின் ஆய்வுரையை நிகழ்த்திய யாழ் பல்கலைக் கழக வர்த்தக பீட விரிவுரையாளர் தி வேல்நம்பி தனது உரையில், தாரகை சஞ்சிகை புதிய கல்விச் சீர்திருத்தத்துக்கொப்ப அதன் அடிப்படையில் குழந்தை இலக்கியத்தைக் கருவூலமாகக் கொண்டு அமைந்துள்ளது மெச்சத்தக்கது என்றார். (உ-79)

## இராணுவத்தினர் தாக்குதல்

(கொழும்பு)

ஜயகபுர பகுதியில் கடந்த 5 ஆம் திகதி பதுங்கியிருந்த இராணுவத்தினர் காலை 7.30 மணியளவில்விடுதலைப் புலிகளின்நடமாட்டத்தைஅவதானித்ததையடுத்துஅவர்கள் மீதுதாக்குதலைமேற் கொண்டனர்.

அப்போது இராணுவத்தினரைநோக்கித்திருப்பித்தாக்கியவிடுதலைப்புலிகள் பின்புகம் முன்இறந்தவர்களைத் தூக்கிக் கொண்டு பின்வாங்கிச் சென்றுள்ளனர்.

இத்தாக்குதல் சம்பவத்தில் 3 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டிருக்கலாம் அல்லது காயப்பட்டிருக்கலாம் என்று இராணுவத்தரப்பு உறுதிசெய்துள்ளது.

காயமடைந்தஇரண்டுஇராணுவத்தினர் பதவியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தகவல்களை ஊடகத் தகவல் நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (எ)

## வளர்ப்பு நாய்களுக்கு மருந்தேற்றல்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட அரியாலைப் பகுதியில் எதிர்வரும் 11. 12 ஆம் திகதிகளில வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளது

11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை—சாந்தி ச. ச. நிலையம், கலைமகள் ச. ச. நிலையம், திருமகள் ச. ச. நிலையம் ஆகியவற்றிலும்,

12ஆம் திகதி புதன்கிழமை சென் பெனடிற் பாடசாலை, நரியன்குண்டு சந்தி தேவாலயவளவு, நல்லூர் தெற்கு ச. ச. நிலையம் ஆகியவற்றிலும் வைத்து வழங்கப்படவுள்ளது. (உ)


## வலம்புரி ஆதரவில்
## அமரர் சின்னத்தம்பி செல்லத்துரை (செய்தியாளர்) அவர்களின் ஞாபகார்த்த
## "சிறுவர்பாடல்" போட்டி

★ முதலாம் பரிசு 1500
★ இரண்டாம் பரிசு 1000
★ மூன்றாம் பரிசு 500

மற்றும் ஆறுதல் பரிசுகள் 5

- நாட்டின் சமகால சூழலைக் கருப்பொருளாகக் கொண்டு பாடல்கள் புனையப்பட வேண்டும்.
- பாடல்கள் சிறுவர்களின் உடல் உள விருத்திக்கு உதவுவதாக அமைதல் வேண்டும்.
- பாடல்களில் வரும் சொற்கள் சிறுவர்களுக்கு ஏற்ப இலகுவான மொழிநடையில் அமைதல் வேண்டும்
- பாடல்கள் 24 வரிகள் கொண்டதாக அமைதல் வேண்டும்
- பாடல்கள் மொழி பெயர்ப்பாகவோ, தழுவலாகவோ ஏற்கனவே பிரசுரமானதாகவோ இருத்தல் கூடாது
- நாட்டின் எப்பகுதியில் வாழ்பவரும் வயது, பால் வித்தியாசமின்றி போட்டியில் கலந்து கொள்ளலாம்
- தாளின்ஒரு பக்கத்திலேயே பாடல்கள் எழுதப்பட வேண்டும
- மேற்படி விதிமுறைகளிற்கு அமையாத பாடல்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது
- வலம்புரி ஆசிரிய பீடத்தின் நடுவர்களின் தீர்ப்பே முடிவானது
- "ஞாபகார்த்த சிறுவர் பாடல்போட்டி" வலம்புரி இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு 31-12-2001இற்கு முன்னதாக அனுபபிவைக்கவும்
- பரிசளிப்பு தைப்பொங்கல் பண்டிகையின் போது வழங்கப்படும்

உருவுகண்டுஎள்ளாமைவேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார்உடைத்து
குறள்

# வலம்புரி

## மகேஸ்வரனின் சாதனை !

யாழ் மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட மகேஸ்வரன் இரண்டாவது தடவையாகவும் வெற்றி பெற்றிருப்பது முக்கியமான ஓர்பதிவெனலாம்.

மகேஸ்வரனுக்கு மக்கள் வாக்களித்ததிற்கு பல காரணங்கள் உண்டு. அதில் குறிப்பாக

★ விடுதலைப் புலிகள் மீதான தடைநீக்கம், அவர்களுடனான சமாதானப் பேச்சுவார்த்தை, யுத்த நிறுத்தம், பாதை திறப்பு போன்றவற்றை ஐ.தே கட்சி பதவியேற்று 45 தினங்களுக்குள் செய்து முடிப்பதாக வாக்குறுதி அளித்தமை.

★ இடம் பெயர்ந்த மக்களை, அவர்களின் சொந்த இடங்களில் மீளவும் குடியமர்த்தல் (காங்கேசன் துறை, மாவிட்டபுரம், கீரிமலை, வயாவிளான் உட்பட)

★ நாட்டில் ஏதோவொரு வகையில் சமாதானம் ஏற்பட வேண்டுமென தம்மை அர்ப்பணித்து தியாகம் செய்யும் யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் (முழுமைக்கும் பொருந்தாது) யாழ் பொதுநூலகம் எரிந்ததையும் மறந்து மகேஸ்வரனின் தற்துணிபில் நம்பிக்கை கொண்டு வாக்களிப்பில் அதிகமாகப்பாடுபட்டமை - (கூட்டமைப்புக்கும் பொருந்தும்) இத்தகைய காரணங்களே மகேஸ்வரனின் வெற்றிச் சாதனைக்கு வழி சமைத்தது.

குறுங்கால அரசியல் அனுபவத்துடன், தமிழ் கூட்டமைப்பில் இணைய மாட்டேன் எனக்கூறி தனித்து நின்று போட்டியிட்டு அதில் வெற்றியையும் சாதித்த மகேஸ்வரனின் தற்துணிவு உண்மையிலேயே பாராட்டுக்குரியது.

அவர் வழங்கிய வாக்குறுதிகள் விசுவாசமானவையாக- சமாதானம் ஏற்படுத்த வேண்டுமென்ற பெருநோக்கில் கூறப்பட்டிருந்தாலும், ஐ.தே.கட்சியின் போக்கையும் இலங்கை அரசியலில் மகாசங்கம் கொண்டிருக்கும் ஆதிக்கத்தையும் மகேஸ்வரன் மறந்து விடக் கூடாது.

ஏனெனில் சந்திரிகாஅரசு கொண்டுவந்த உத்தேச அரசியல் அமைப்பு தமிழர்களுக்குக் கூடிய அதிகாரங்களை வழங்குவதாக கூறி ஐ.தே.கட்சி பாராளுமன்றில் வெளிநடப்புச் செய்தும் மகாநாயக்கர்களின் ஆலோசனைப்படியேஅரசு வழிநடத்தப்படுமென ரணில் கூறியதும் மகேஸ்வரன் அளித்த வாக்குறுதிகளுக்கு சாதகமானதல்ல.

---

### பரமபிதா காட்டிய பாதை

# கிறிஸ்துவின் வருகையை எதிர்கொள்ள எப்பொழுதும் விழிப்பாய் இருக்க வேண்டும்



இயேசுக்கிறிஸ்துவின்இரண்டாம் வருகையை நினைவு கூர்வதே திருவருகைக் காலமாகும்; இயேசுவின் மாட்சிமையுள்ளஇரண்டாம் வருகை அண்மிக்கும் போது நடக்கப் போகும் சம்பவங்களை ஏசாயா இறைவாக்கினர் பின்வருமாறு கூறுகின்றார். 'அவர்வேற்றினத்தாரிடையே உள்ள வழக்குகளைத் தீர்த்து வைப்பார் பல இன மக்களுக்குத் தீர்ப்பளிப்பார்; அவர்கள் தங்கள் வாள்களைக்கலப்பைக் கொழுக்களாகவும் தங்கள் ஈட்டிகளைக் கருக்கருவிகளாகவும் அடித்துக் கொள்வார்கள்' ஓர் இனத்துக்கு எதிராக மற்றோர் இனம் வாள் எடுக்காது; அவர்கள் இனி ஒரு போதும் போர்ப்பயிற்சி பெறமாட்டார்கள். யாக்கோபின் குடும்பத்தாரே வாருங்கள் நாம் ஆண்டவர் வழியில் நடப்போம்' என்பர். (ஏசா: 2:5)

### இருள் மறைந்து பகல் தோன்றும்

வன்முறையின் ஆட்சிக்காலம் பல வடுக்களை உண்டாக்கும். நீதி, நியாயங்கள் மறைக்கப்படும். ஆனால் நீதியை அழிக்க முடியாது. தக்க காலத்தில் அதன்வெளிப்பாட்டை நாம் காணலாம். மனித வாழ்க்கையானது நம்பிக்கையின் ஒளியில் கட்டப்பட வேண்டியது. அவநம்பிக்கை இருள் அதனை அழித்து விடாமல் பாதுகாக்க வேண்டும். ஆகவே நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்று புனிதபவுல் கூறுகின்றார். 'இரவு முடியப் போகின்றது; பகல் நெருங்கியுள்ளது. ஆகவே இருளின் ஆட்சிக்குரிய செயல்களைக் களைந்து விட்டு, ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலன்களை அணிந்து கொள்வோமாக!, பகலில் நடப்பது போல மதிப்போடு நடந்து கொள்வோமாக! களியாட்டம், குடிவெறி, கூடாஒழுக்கம், காமவெறி, சண்டைசச்சரவு ஆகியவற்றைத் தவிர்ப்போமாக.'
(உரோ.13:13)

வீதியில் நடக்கும் போது நாம் விழிப்போடு இருக்கவில்லையென்றால் விதியின் விளையாட்டுக்கு இலக்காகி விடுவோம். அல்லது பாதை மாறிவிடுவோம். விழிப்போடு இல்லையென்றால் எம் உடமைகளும், ஏன் திறமைகளும் கூடப் பறிபோய்விடும். விஞ்ஞானத்தின் சிந்தையினால் கண்டுபிடிக்கப்பட்ட சாதனங்கள் பல விபரீதமான விளைவுகளையும் கொடுக்கின்ற இக்காலத்திலே நாம் விழிப்பாய் இருப்பது மிகவும் அவசியமாகும். சைகைகளையும், அறிகுறிகளையும் கண்டு தம்மினத்துக்கு வரும் அழிவுகளில் இருந்து தம்மைக் காத்துக் கொள்ள ஐந்தறிவு படைத்த விலங்குகள் கற்றுக் கொண்டுள்ளன. ஆனால் மனிதன் இவற்றை அறிந்து தன்னினத்தை எப்படி தாக்கலாம் அழிக்கலாம் என்று கீழ்மைச் சிந்தையுடையவனாக மாறி வருகின்றான் மனிதன் எதை இழந்தாவது பணம்சம்பாதிக்கும் வழியைத் தேடி அலைகின்றான். ஆனால் இறைவன் சொல்கின்றார் 'ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் தன் ஆன்மாவை இழந்து விட்டால் அதனால்வரும்பலன் என்ன?' இறைவார்த்தைக்கு முரணானதாக இருக்கின்றது மனித வாழ்க்கை.

### தண்டனை பெறுவர்

இடம் பெயர்வுகளும், இல்லிட இழப்புக்களும், பொருள் பண்டங்கள் களவாடப் படுகின்றமையும், நொந்துபோன மானிடத்தை மென்மேலும் நோகச் செய்யும் செயல்களாகும் செய்வினை, சூனியங்கள் குடும்பத்தைப் பிரிக்கும் செயல்கள் மனிதனுக்கு ஒவ்வாத வாழ்க்கை முறையாகும் ஒன்றும் அறியாத அப்பாவிகள் இவ்வாறான செய்கைகளால் அல்லலுற்று அவதியுறுகின்றார்கள். ஊழியம் செய்தவனின் உரிமையை தள்ளிப்போட்டு நியாயப்படுத்தி, நிராகரிக்கின்றார்கள். இப்படியானவர்கள் எல்லாம் மானிடத்தின் காவலர்கள் என்று பெருமை பாராட்டி பந்தியில் முதலிடத்தையும் பிடித்துக் கொள்கிறார்கள். இவர்கள் நிச்சயம் தண்டனைக்கு உள்ளாவார்கள் என்று இறைவன் எச்சரிக்கை விடுக்கின்றார்.

### உரிமை பெற விழிப்போம்

உரிமை என்பது உடன் பிறந்த சொத்து. அதனை யாராலும் எடுக்க முடியாது. சரியானதைத் தெரிந்துகொள்ளும் உரிமைஇருப்பது போல, பிழையானதை நிராகரிக்கும் உரிமையுமுண்டு. நாம் இரண்டையும் ஒன்றாகப் பயன்படுத்துவதாலே தீமைகள் எம்மைச் சூழ்ந்து கொள்கின்றன. சரியானதைச் செய்ய வேண்டுமென்றால் நாம் விழிப்பாக இருக்கவேண்டும். கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு நாம் எந்நேரமும் விழிப்புள்ளவர்களாகச்செயற்பட வேண்டும் என்பதை இயேசு மத்தேயு நற்செய்தி மூலம் தருகின்றார். 'இரவில் எந்தக் காவல் வேளையில் திருடன் வருவான் என்று வீட்டு உரிமையாளனுக்குத் தெரிந்திருந்தால்...... வீட்டில் கன்னமிடமாட்டான் என்பதை அறிவீர்கள். எனவே நீங்கள் ஆயத்தமாய்இருங்கள் நீங்கள் நினையாத நேரத்தில் மானிடமகன் வருவார். (மத்.24:44) அவரின் வருகையை எதிர் கொள்ள ஆயத்தமாவோமாக. □

**செல்வமகள் மரியநிலக்ஷி**

---

### சோதிட பலன்

# உங்கள் பிறப்பு நட்சத்திரத்திற்குகந்ததான சுபவேளைகளைத் தெரிந்து செயற்படுங்கள்

**அச்சுவினி நட்சத்திர காரர்களுக்கு**

எப்போதும் ரோகிணி நட்சத்திரம் வரும் நாள் எல்லா விதமான சுபகாரியங்களை செய்யவும் சிறப்பான நாள். அமாவாசை கழிந்த 2 வது நாள் வளர்பிறைகாலம், எப்போதும் எல்லா விதமான சுப நிகழ்ச்சிகளுக்கும் தேர்ந்தெடுக்கலாம். வாரநாட்களில் திங்கட்கிழமை அமிர்தயோகம் வரும் நாள் எல்லாவித நல்ல செயல்களுக்கும் உரிய நாள். ஆனந்தாதியோகத்தில் வர்த்தமானயோகம் நன்மைக்குரியதே. இதன் பலன் அதிகலாபம். கௌரி பஞ்சாங்கத்தில் காலை சூரியன் உதயம் முதல் 48 நிமிடத்திற்குள் எதையும் செய்ய, ஆரம்பிக்க நன்மையாகும். அமிர்தவேளை சந்திரன் ஒரையில் செய்யச் சிறப்பு மற்றும் சூரியன் உதயமான பின் 3.00 மணிநேரம் கடந்து 4 முதல் 5.00 மணிக்குள் குரு ஓரையில் எல்லா சுபகாரியங்களும் செய்யலாம். சூரியன் உதயம் முதல் 5.00 மணிநேரத்திற்குப் பின் 11. முதல் 12.00 மணிக்குள். தொழில் ஆரம்பம் செய்ய, மனை முகூர்த்தம் செய்ய, வீட்டிற்கு வாயில் வைக்க, புதுமனை குடிபுகவும் சிறப்பானகாலம். இது திங்கட்கிழமையில் மட்டும். மற்றும் ரோகிணி நட்சத்திரம் புதன்சுபகாரியங்கள் செய்பவும்

**பரணி நட்சத்திரகாரர்களுக்கு**

இந்தப்பரணி நட்சத்திரம் 4 பாதங்களிலும் பிறந்தவர்களுக்கு (ஆண்-பெண்) 27வது நட்சத்திரமான ரேவதி நட்சத்திரம் எப்போதும் எல்லா கிழமையில் வரும்நாள் சித்த யோகம் உதயமாகும். இந்த நாள் உங்களுக்குச் சிறப்பான நாள். எதைச் செய்தாலும் சந்திரன் ஒரை சிறப்புத்தரும். ரேவதி நட்சத்திரம், வியாழக்கிழமையில் வந்தால் அன்று சித்த யோகம் வரும். இந்தக் காலத்தில் நீங்கள் எல்லா சுப முயற்சிகளிலும் ஈடுபடலாம். அரசியல், அரசாங்க காரியங்களுக்கு. ஆனந்தாதி யோகத்தில் மித்திரயோகம் சிறப்பு தரும் நாள். இந்த அச்சுவினி நட்சத்திரத்திற்கு வேதை அதாவது ஆகாத நட்சத்திரம் கேட்டை. திருமணம் செய்ய, தொழில் கூட்டுசேர்க்கவும் பொருந்தாத நட்சத்திரங்கள் அவையாவன; அச்சுவினி, ஆயிலியம், மகம், கோட்டை, மூலம், ரேவதி, அதிர்ஷ்டமலர் - செவ்வல்லி. அனுகூல தெய்வம் இந்திரன் அதிர்ஷ்டக்கல் வைடூரியம். அதிர்ஷ்ட நிறம் கரும்பச்சை, அதிர்ஷ்ட எண் - 1. முயற்சி செய்யவும் நன்மை தரக் கூடியதே. அதிபதி சுக்கிரன், வாகனம் கருடன் அதிபதிபலன் சந்தோஷம் தரும். வாகனப்பலன் சுகவிருத்தி. சந்திரன் பலன்- தேய்பிறைகாலம், பௌர்ணமிகழிந்த 12வது நாள் நீங்கள் எந்தசுபகாரியமும் செய்யலாம். பரணி நட்சத்திரம் அசுர குருவின் (பாவ கிரகம்) நட்சத்திரமாக இருப்பதால் உங்களுக்குத் தேய்பிறைக் காலம் நன்மைக்குரியதாக இருக்கிறது. எனவே, எதற்கும் வளர்பிறையையே எதிர்பார்க்கக் கூடாது. வளர்பிறையில் பிறந்திருந்தால் மட்டும் வளர் பிறையிலும் செய்ய முயற்சிக்கலாம் 'ஞாயிற்றுக்கிழமையில் அமிர்த யோகம் வரும் நாள் எல்லா சுப காரியங்கள்செய்யவும், முயற்சிக்கவும் நல்லதே ஆனந்தாதி யோகத்தில் வர்த்தமான யோகம் சிறப்பு நன்மைக்கு உரிய நாள், ரேவதி'

(2ஆம் பக்கம் பார்க்க)

**டாக்டர் எம். பி. ராமன்**
ஜோதிட வித்தகர்

---

### தினசரி தியானம்

## மாயை

வல்லமையே காட்டுகின்ற மாமாயை நானொருவன் இல்லையெனின் எங்கே இருக்கும் பராபரமே.

தாயுமானவர்

ஈசா. உனது யோக மாயையினால் நீ உலகாகக் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறாய். மாயை சொரூபமாக அல்லாது உன்னை நான் உள்ளபடி காண்பேனாக.

முதலில் முட்டையாயிருந்து பிறகு பறவையாவது பறப்பனவற்றின் இயல்பு. பரம்பொருள் பிரபஞ்ச சொரூபமாகக் காட்சிகொடுத்துக் கொண்டிருக்கிறார். ஞானக்கண் பெறுகிறவர்களுக்குப் பிறகு அவர் உள்ளபடி தமது மெய்க்காட்சியளிக்கிறார். பிரபஞ்சமாக தம்மைக் காட்டிக் கொள்வது அவருடைய இயல்பு இந்த இயல்பை மாயை என்கிறோம்.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்.

# பல்வேறு துன்ப துயரங்களைதாங்கி ஜனநாயகசூழலை ஏற்படுத்தினோம்!

## நன்றிதெரிவித்துவிடுத்தசெய்தியில்ஈ.பி.டி.பி

(யாழ்ப்பாணம்)

நடந்து முடிந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலின் போது பல்வேறு நெருக்கடிகள் மற்றும்சோதனைகளுக்கு மத்தியிலும் எமது கட்சியின் சார்பாக வாக்களித்த பல்லாயிரக்கணக்கானவர்களில் ஒவ்வொருவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இத்தேர்தலின் முடிவுகள் குறித்து எமக்கு மகிழ்ச்சியில்லைஎனினும் முக்கியமான மூன்று விடயங்களில் எமது வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

★ முதலாவதாக நாங்கள் ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வு வாழலாம் என்பதை பகிரங்கமாக எந்த ஒளிவு மறைவும்இன்றி வெளிப்படுத்தி வந்தோம். புலிகளின் தலைவர் பிரபாகரன் தமது உரையின் போது அழகான இந்த தீவில் ஒருங்கிசைவாக ஒன்றுகூடிவாழமுடியும் எனக் குறிப்பிட்டுள்ளார். அவரை இவ்வாறு சொல்லவைத்தமையானது எமது செயற்பாடுகளுக்கு கிடைத்த ஒரு வெற்றியாகும்;

ஈழமக்கள்ஜனநாயகக்கட்சி [ஈ.பி டி.பி) நேற்று விடுத்த பத்திரிகைசெய்தியிலிவ்வாறு தெரிவிக்கப்பட்டுளளது அதில மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

★ இரண்டாவதாக 1989ன் பொதுத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டவர்களைப பதவிதுறக்கவைத்தும் 1994ல் மக்களில் வாக்களிப்பில் ஈடுபடுவதற்கே அனுமதி மறுத்தும் வந்த சகதிகள் பாராளுமன்ற பொதுத்தேர்தலை பயன்படுத்த முடியும் என்ற தீர்மானம மேறகொள்ள எமது நடவடிக்கைகளே காரணம் என்பது வெளிப்படை.

பல்வேறு குழுக்களாகப் பிரிந்து நின்றவர்களை ஒரே மூட்டையில் கட்டி வைத்து பின்னாலிருந்துஇயக்கியசக்திகளின் சதி முன்னிலைக்குவந்துவளது. எனினும நாம்முன்னெடுத்துச்சென்ற பாதைக்கு இத்தகையவர்களை இழுத்து வந்திருப்பது வெற்றியாகும்.

★ மூன்றாவதாக கடந்த பாராளுமன்றப் பொதுத்தேர்தலை விடவும் அதிகப்படியான வாக்குகள் இம முறை யாழ்ப்பாண மாவட்டததில் எமககு கிடைத்துளளது, எனவே எமது வாக்கு வங்கி உறுதியான அடித்தளத்தைக் கொண்டுள்ளது.

எமது தேர்தல் முடிவுகள் குறித்து நாம் மகிழ்ச்சி கொளமுடியாதபோதும் கவலையடைவதற்கில்லை மேலும 1989 ன் பொதுத் தேர்தலின் போது நிலவியதை விடவும் 1994ன பொதுத் தேர்தலின் போது காணபபட்டதை விடவும் ஜனநாயக பூர்வசூழ்நிலை தற்போது நிலவுகிறது என்பது பகிரங்கப் படுத்தப் பட்டுளளது. பல்வேறு இழப்புக்களையும் துன்ப துயரங்களையும் ஏற்றுச் சகித்துக் கொண்டுதான் இந்த ஜனநாயகச் சூழலை நாங்கள்தோற்றுவித்தோம் இந்தச் சூழலை தவறாக பயன்படுத்திய சக்திகள் கபடத்தனமான குறுக்கு வழிகள் மூலம் அவர்களே எதிர்பாராத வகையில் முன்னிலைக்குவந்துள்ளன எனவே உருவாகியுள்ள இந்த ஜனநாயக சூழலைப் பாதுகாக்கும் பெரும பொறுப்பும் போர்ச் சூழலால் துன்பப்படும் மக்களின் அன்றாட வாழ்க்கை அவலங்களைக்களைய வேண்டியபொறுப்பும் இவர்களுக்கே உரியது;

அத்துடன்புலிகளைப்பேச்சு வார்த்தை மேசைக்கு அழைத்துவரவேண்டிய கடமையும் இவர்களுக்கு உண்டு கடந்த காலங்களைப்போல் இந்தப் பொறுப்புக்களில் இருந்தும் கடமைகளில் இருந்தும் விலகி செல்லவோ நழுவிச் செல்லவோஒதுங்கிக்கொள்ளவோ புதிய பிரதிநிதிகள் முற்படமாட்டார்கள் என நம்புகிறோம்.

மேலும் தமிழ்பேசும் மக்களின் மத்தியில் முதன்மைச் சக்திகளாக பரிணமித்துள்ளவர்கள் புலிகள் மத்தியில் தங்களுக்குளள செல்வாக்கைப் பயன்படுத்தி சகோதரப் படுகொலைக்கு முற்றுப் புள்ளி வைக்கவும் யாழ்ப்பாணகுடாநாட்டிற்கான தரைவழிப்பயணத்திற்கு வழி காணவும் போருக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் படுபடுபவர்களாயின் மக்கள் மகிழ்ச்சி கொள்ள முடியும். இந்த திசைவழிக்கு மாறாக செயற்படுபவர்களாயின்தமிழ்பேசும் மக்களின் சொல்லொணாத் துயரங்களுக்கு முகம் கொடுக்க நேரலாம் என்னும் ஆபத்தையும் உணர்ந்து கொள்ள வேண்டும்;

எமக்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் மக்களுக்கானஎமதுபணிகள் எதுவிதஇடையூறுகளுக்கு மத்தியிலும் தொடரும் என உறுதியளிக்கிறேன். என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ந]

# ஜனாதிபதியும் பிரதமரும் வெவ்வேறு கட்சிகள்

## அரசியலில் புதியதிருப்பம்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறை ஆட்சிக்கு வந்தபின் நடந்து முடிந்த தேர்தலின் முடிவுகளின் படிஜனாதிபதி ஒருகட்சியையும் பிரதமரும்அமைச்சரவையும் பிறிதொரு கட்சியையும் கொண்டிருப்பது இதுவே முதற்தடவையாகுமென இலங்கைஅரசியல் வரலாற்றில் இதுஒருதிருப்புமுனையாக உள்ளதென அரசியல் ஆய்வாளர் கருத்து வெளியிட்டுள்ளனர்;

இம்முறையினால் ஜனாதிபதியும் பிரதமரும் எந்தவொரு விடயத்திலும் கலந்துபேசி ஒருமுடிவுக்கு வரக்கூடியநிலையை ஏற்படுத்தி இருப்பதால் இனப்பிரச்சினைத்தீர்வுக்கு சுமூகமான முறையில் தீர்வுகாண்பதற்கு வழிவகுக்குமெனவும் அரசியல் ஆய்வாளர்கள் மேலும் கருத்து வெளியிட்டுள்ளனர். (வ)

### தேர்தல்

தெரிவிக்கையில், நடைபெற்று முடிந்த தேர்தலில் தமிழ், சிங்கள மக்கள் கூட்டாக வழங்கிய ஆணையை ஏற்று இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அனைத்து நடவடிக்கையை அமையபபோகும் புதிய அரசு மேற்கொளளவேண்டும் இல்லாவிட்டால் நாடு பிளவுறுவதை தடுக்கமுடியாது என்று கூறினார். (க)

### எதிர்க்கட்சி..

ரமநாயக்கா இப் பதவிக்கு போட்டியிட விரும்ப வில்லை என தெரிவித்துளளதை அடுத்து பின்னைய இருவரும் தத்தமகு ஆதரவு தேடும் முயற்சியில் இதர அரசியல கட்சித் தலைவர்களின் ஆதரவை நாடி வருவதாகவும் தெரிவிக்கப் பட்டுளளது. (க-வ)

### பிரதமராக . . .

இது விடயம் தொடர்பாகத் தான் ஆலோசிக்க வில்லை எனத் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க பிரதம மந்திரிப் பதவி ஏற்றபின் ஆலோசிக்கலாம் என்று தெரிவித்துள்ளதுடன் அமைச்சரவை நியமனம் தொடர்பாக கட்சிகளின் முக்கியஸ்தர்களுடனும் எம்பிகளுடனும் கலந்து பேசியே ஒருமுடிவுக்கு வரவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து அமைச்சரவை அமைப்பதில் இழுபறிநிலை காணப்படுவதால ரணில் விக்கிரமசிங்க புதிய பிரதமராக பதவி ஏற்றகையோடு புதிய அமைச்சரவை உடனடியாக அமைக்கப்பட மாட்டாது என்றும் இன்னமும் இரண்டொரு தினங்களின் பின்னரே புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் புதிய அமைச்சரவையில் முன்னாள் சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி திஸநாயக்கா, முன்னாள் பிரதி நிதியமைச்சா பேராசிரியர் ஜி.எல்.பீரிசும் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களும் நியமிகப்படலாமென்றும் தெரிவிக்கப்படுகிறது;

புதிய அமைச்சரவையில் 30 பேர் இடம் பெறுவர் எனவும் வெளிநாட்டமைச்சராக கே.என். சொக்ஸி நியமிக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது, (வ)

# கூட்டணி தலைவர்சிவா தேசியல் பட்டியல் எம்.பி?

(கொழும்பு)

நான்குதமிழ்க கூட்டமைப்பின் சார்பில் தேசியப்பட்டியல் எம்.பியாக தமிழர்விடுதலைக் கூட்டணித்தலைவர் மு.சிவசிதம்பரத்தை தேர்தல் ஆணையாளரின் தெரிவுக்கு கூட்டணி சிபார்சு செய்துள்ளது.

தற்போது தமிழகத்தில் தங்கியுள்ள தலைவர்மு.சிவசிதம்பரம் அப்பதவியை ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் கடந்த தேர்தலில் போட்டியிட்டு கணிசமான வாக்குகளைப் பெற்றிருந்தமுன்னாள் உடுவில் கிராமசபைத் தலைவருமான எஸ்.முத்துலிங்கத்திற்கு வழங்கப்படலாம் என கூட்டணிவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

# வாக்கான பெருமக்களுக்கு புளொட் தலைவர் நன்றி

(வவுனியா)

நடந்த முடிந்த தேர்தலில் எமது கட்சிக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்;

புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் நடைபெற்று முடிந்த தேர்தல் தொடர்பான அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்;

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது தேர்தல் வாக்குறுதிகளைமுன்னெடுப்பது எமது தலையாய கடமையாகும்;

மக்களின் மேல் திணிக்கப்படுகின்ற அழுத்தங்களைக் குறைக்கப் பாடுபடுவது எமது தலையாய கடமையாகும்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

### சித்தார்த்தனின்-..

யனின் உத்தரவின் பேரில் இவரின் வீடு சோதனையிடப் பட்டதாக வவுனியா பொலிசார் தெரிவித்துள்ளனர்;

மேற்படி கொலைச் சம்பவம் தொடர்பாக புளொட் சந்தேக நபர்கள்மூவர்தேடப் பட்டு வருவதாகவும் பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர். (ந- 4)

### தேர்தல் முடிவுகளை..-

தில் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டோர் ஊர்காவற்துறைப் பகுதியிலேயே கண்காணிப்பில் ஈடுபட்டனர் ஏனைய இடங்களில் கண்காணிப்பு சீராக இடம்பெறவில்லை.

மேலும் சில வாக்களிப்பு நிலையங்களில் அடையாள அட்டைகள் காண்பிக்குமாறு வாக்காளர்வற்புறுத்தப்பட்டதாகவும் வாக்களிக்கும் உரிமை மறுக்கப் பட்டதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே யாழ் மாவட்ட தேர்தல் முடிவுகளை ரத்துச் செய்ய வேண்டும் எனக்கேட்டுள்ளார். (க)

# மகேஸ்வரன் ஆசி பெற்றார்

யாழ் மாவட்டத்திலஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டி இட்டு இரண்டாவது தடவையாகவும் எம்.பி.யாகத் தெரிவு செய்யப்பட்ட தி. மகேஸ்வரன் அளவெட்டி அருட்கவி வினாசித்தம்பிதெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரிடம் நேற்று நேரில் சென்று ஆசி பெற்றுள்ளார்; (வ)

### ஊரடங்கு..

காலை 6.00மணியுடன் நீக்கப்படுமென அரசதகவல் வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன;

இதேவேளையில் ஊரடங்கு வேளையில் யாழ்ப்பாண பகுதியில் நடமாடியோர் படையினரால் எச்சரிக்கப் பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது, (க)


# நல்வாழ்த்து

மணமக்கள்

யோகேஸ்வரன் தெய்வநிதி

இருவரும்

இல்லறமென்னும் நல்லறத்தில்
இணைந்து இன்புடன் வாழவே
நல்வாழ்த்து கூறி நின்றோம்
நலம்புரியும் வலம்புரியார்

வலமபுரிக் குடும்பம்



# மனமார்ந்த நன்றிகள்

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் எமது அணியின் மீன் சின்னத்திற்கு வாக்களித்த மக்களுக்கும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் ஜனநாயக விழுமியங்களைப்பேணி எமது கட்சிக்கு ஆதரவாக பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டதோடு மற்றும் பல்வகை உதவிகளைப் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழ் சிங்கள மக்கள் யுத்தம் முடிவுக்கு வரும் சமாதானம் மலரும், அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் என்ற எதிர்பார்ப்புடனேயே வாக்களித்துள்ளனர். இவற்றைச் சாத்தியமாக்குவதற்கு உண்மையான, நேர்மையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறான முயற்சிகளுக்கு எமது ஆதரவும், ஒத்துழைப்பும் எப்போதும் உண்டு.

இம்முறை தேர்தல் வன்முறைகள் நிறைந்ததாகவும், உயிர்ப்பலிகள் அதிகரித்தும் காணப்பட்டது. இத்தகைய அநாகரிகமான அரசியல் கலாசாரம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு நாகரிகமான ஒரு புதிய பாரம்பரியம் ஒன்று எதிர்காலத்தில் தோற்றுவிக்கப்பட அனைவரும் ஒத்துழைப்போம்.

வெல்க ஈழமக்கள் புரட்சிகர விடுதலைப் போராட்டம்

த. சுபத்திரன்
ஈழமக்கள் புரட்சிகர
விடுதலை முன்னணி.

[கி-2991]


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 9ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.